## (ஆ) வெளிநாட்டு வர்த்தகம்*

### பொதுப்படையான போக்கு

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் சம்பந்தமான மொத்த விபரங்களை அட்டவணை II ஆ- 1 தருகிறது.

**அட்டவணை II ஆ-1**
**வெளிநாட்டு வர்த்தகம் 1959-62**

| காலம் | பத்து லட்சம் ரூபாய்களில் | | | ஏற்றுமதிகள் இறக்குமதிகளின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் (அ) | இறக்குமதிகள் (ஆ) | வர்த்தக நிலுவை | |
| 1959 .. .. | 1,754 | 2,005 | —251 | 87 |
| 1960 .. .. | 1,832 | 1,960 | —128 | 93 |
| 1961 .. .. | 1,733 | 1,703 | + 30 | 102 |
| 1962 .. .. | 1,808 | 1,660 | +148 | 109 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்.

(அ) கப்பலில் ஏற்றப்பட்டவரையுள்ள பெறுமானம்; திருப்பி ஏற்றப்பட்டவையும் உட்பட.

(ஆ) கொள்விலை காப்புறுதி கப்பற்கூலி உட்பட.

1962-ம் ஆண்டில், ஏற்றுமதிகள் முந்தைய வருடத்திலும் பார்க்க 4.3 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 18080 இலட்சமாகவும், இறக்குமதிகள் 2.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று ரூபா 16600 இலட்சமாகவும், விளங்கின. எனவே 1961-ம் ஆண்டில் ரூபா 300 இலட்சம் கொண்ட சாதகமான வர்த்தக நிலுவை, 1962-ம் ஆண்டில் இன்னும் சீரடைந்து ரூபா 1480 இலட்சம் கொண்ட மிகையைக் காட்டிற்று. இறக்குமதிகளின் விகிதாச் சாரமாக ஏற்றுமதிகள் 102 சதவீதத்திலிருந்து 109 சதவீதத்திற்கு அதிகரித்தன.

ஏற்றுமதி வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முற்றிலும் ஏற்றுமதிகளின் மொத்த அளவு அதிகரித்தமையினால் ஏற்பட்டது. மகாவங்கியின் குறிகாட்டிகளின்படி, ஏற்றுமதிகளின் அளவு, முந்தைய வருடத்திற்குரிய 107 புள்ளிகளிலிருந்து 115 புள்ளிகளுக்கு உயர்ந்துள்ளது. எனினும் ஏற்றுமதிகளின் சராசரி விலை, 1962-ம் ஆண்டிற் சிறிது வீழ்ச்சியுற்று 1961-ம் ஆண்டுக்குரிய 95 புள்ளிகளிலிருந்து 93 புள்ளிகளுக்குக் குறைந்தது. இது 1961-ம் ஆண்டிற் தோன்றிய வீழ்ச்சிப் போக்கின் தொடர்ச்சியாகும். ஆயினும் 1962-ம் ஆண்டில் ஏற்பட்ட வீழ்ச்சி, 1961-ம் ஆண்டில் அதற்கு முந்திய வருட நிலையிலிருந்து ஏற்பட்ட 9 புள்ளிகள் கொண்ட வீழ்ச்சியிலும் பார்க்க, எவ்வளவோ குறைவான வீழ்ச்சியாகும்.

---

*இப்பகுதியில் உள்ள புள்ளிவிபரங்கள் யாவும், வேறு விதமாகக் கூறப்படாவிடின், இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்களிலிருந்து பெறப்பட்டவை எனக் கொள்க.

ஏற்றுமதிகளின் அமைப்புப்பற்றிய விபரங்களை அட்டவணை II ஆ-2 காட்டுகிறது.

**அட்டவணை II ஆ-2**

**ஏற்றுமதிகளின் அமைப்பு**

| | பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதமாக | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959 | 1960 | 1961 | 1962 |
| தேயிலை .. .. .. | 1046 | 1096 | 1115 | 1149 | 59·6 | 59·8 | 64·3 | 63·6 |
| இரப்பர் .. .. .. | 298 | 378 | 260 | 290 | 17·0 | 20·7 | 15·0 | 16·0 |
| 3 பிரதான தெங்குப் பொருட்கள் | 244 | 184 | 202 | 227 | 13·9 | 10·0 | 11·7 | 12·6 |
| ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள் .. | 104 | 117 | 104 | 100 | 6·0 | 6·4 | 6·0 | 5·5 |
| மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகள் | 1692 | 1775 | 1681 | 1766 | 96·5 | 96·9 | 97·0 | 97·7 |
| திருப்பி ஏற்றப்பட்டவை .. | 62 | 57 | 52 | 42 | 3·5 | 3·1 | 3·0 | 2·3 |
| மொத்தம் .. .. | 1754 | 1832 | 1733 | 1808 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்.

பிரதானமாக உள்ள மூன்று ஏற்றுமதிப் பொருட்களில் ஒவ்வொன்றும், 1962-ம் ஆண்டில் ஏற்பட்ட மொத்த ஏற்றுமதி வருமான அதிகரிப்பிற் குறிப்பிடும்படியான பங்கை இறுத்துள்ளன. தேயிலை ஏற்றுமதியினாற் கிடைத்த வருமானம் ரூபா 340 இலட்சத்தால் உயர்ந்தது. முந்தைய வருடங்கட்கு உரிய காரணம் போல், இவ்வருடத்திலும் இவ்வுயர்ச்சி முற்றிலும் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவில் ஏற்பட்ட 260 இலட்ச இருத்தல்கள் (6 சதவீதம்) அதிகரிப்பாலேயே உயர்ந்து உள்ளது. 1956ம் ஆண்டு முதல் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலைகளில் ஒரே தொடர்ச்சியாகக் காணப்பட்ட வீழ்ச்சிப் போக்கிற்கு இணங்க, 1962-ம் ஆண்டில் ஒரு இருத்தலுக்கு ரூபா 2.54 ஆக உள்ள சராசரி விலை முந்தைய வருடத்திலும் பார்க்க இருத்தலுக்கு 8 சதம் குறைவானதாகும். 1958-ம் ஆண்டிற்குப்பின் இதுதான் மிகக் கூர்மையான வீழ்ச்சியாகும். இரப்பர் ஏற்றுமதியினாற் கிடைத்த வருமானம் ரூபா 300 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவு 270 இலட்ச இருத்தல்களால் (13.7 சதவீதம்) உயர்ந்ததன் பயனாக ஏற்பட்டது. இரப்பரின் சராசரி ஏற்றுமதி விலை முந்தைய ஆண்டிற்குரிய விலையிலும் பார்க்க இருத்தலுக்கு 3 சதம் குறைவானதாக உள்ளது.

மூன்று பிரதான தெங்குப் பொருட்களினதும் ஏற்றுமதி வருமானம் ரூபா 250 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வுயர்ச்சிக்கு முக்கிய காரணம் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த அளவு 12 சதவீதத்தால் (மகா வங்கியின் குறிகாட்டிகளின்படி 154 புள்ளிகளிலிருந்து 173 புள்ளிகளுக்கு) அதிகரித்தமையேயாகும். இத்தெங்குப் பொருட்களின் சராசரி விலை, முந்தைய வருடத்திலும் பார்க்க 2.5 சதவீதத்தால் (மகா வங்கியின் விலைக் குறிகாட்டியின்படி 80 புள்ளிகளிலிருந்து 82 புள்ளிகளுக்கு) அதிகரித்துள்ளது.

1962-ம் ஆண்டு ஆடி, புரட்டாதி, ஐப்பசி ஆகிய மாதங்களில் இறக்குமதி அளவுக் கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கமாக அமைப்பதற்கும், தனித்தனி உத்தரவுச் சீட்டுக் கட்டுப்பாட்டு முறைகளை விசாலமாக்குவதற்கும், எடுக்கப் பட்ட நடவடிக்கைகளோடு, ஆடி, ஆவணி ஆகிய மாதங்களிற் பலவகையான இறக்குமதித் தீர்வைகளும் புகுத்தப்பட்டன எனினும், இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானம், முந்தைய வருடத்திலும் பார்க்க ஒரு சிறிய அளவால் மட்டுமே (அதாவது ரூபா 430 இலட்சத்தால் மட்டும்) குறைந்தது. மகா வங்கியின் இறக்குமதித் தொகைக் குறிகாட்டியின்படி மொத்த இறக்குமதி களின் அளவு 1.1 சதவீதத்தால் (91 இல் இருந்து 92 ஆக) உயர்வடைந்தது. பிரதான தொகுதிகளுக்கான தனித்தனிக் குறிகாட்டிகளின்படி முதலீட்டப் பொருட்கள் 13.7 சதவீதத்தாலும், நடுத்தரமான பொருட்கள் 11.0 சத வீதத்தாலும் அதிகரித்திருக்கையில், நுகர்ச்சிப் பொருட்களின் தொகை 6.0 சதவீதத்தாற் குறைந்தது. நுகர்ச்சிப் பொருட்களுள், மிகக் கூர்மையான, அதாவது 8.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சி, ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள்'' என்ற தொகுதியில் ஏற்பட்டிருக்கையில், ''உணவும் குடிவகையும்'' என்ற தொகுதி, 6.2 சதவீதத்தாலும் ''ஆடைகள்'' என்ற தொகுதி, 1.3 சதவீதத் தாலும் வீழ்ச்சியுற்றன.

எனினும், இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட உயர்ச்சியை, இறக்குமதி களின் சராசரி விலையில் ஏற்பட்ட 5.9 சதவீத வீழ்ச்சி, மேலதிகமாக ஈடு செய்தது. மகாவங்கியின் விலைக்குறிகாட்டிகள் முந்தைய ஆண்டிற்குரிய 101 புள்ளிகளிலிருந்து 95 புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்றதாக உள்ளன. உண்மையில் இறக்குமதிகளின் பிரதானத் தொகுதிகள் மூன்றிலும் விலை வீழ்ச்சி காணப்பட்டது. முதலீட்டப் பொருட்களின் தொகுதியிற்தான் மிகக்கூர்மையான வீழ்ச்சி ஏற்பட்டது. இவற்றிற்கான குறிகாட்டி 112 புள்ளிகளிலிருந்து 92 புள்ளிகளுக்கு 17.9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்கை யில், நடுத்தரமான பொருட்கள் 4.5 சதவீதத்தாலும், நுகர்ச்சிப் பொருட்கள் 2.0 சதவீதத்தாலும் குறைந்தன. நுகர்ச்சிப் பொருட்களுள் மிகக்கூர்மையான, அதாவது 6.3 சதவீத விலை வீழ்ச்சி, ஆடைவகைகளில் ஏற்பட்டது. ''உணவும் குடிவகைகளும்'' என்ற தொகுதிப் பொருட்கள் 1.0 சதவீதத்தாலும் ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள்'' என்ற தொகுதி 4.2 சதவீதத்தாலும் வீழ்ச்சி யுற்றன.

ஏற்றுமதிகளினதும், இறக்குமதிகளினதும் விலைக்குறிகாட்டிகள் முறையே 2.1 சதவீதத்தாலும் 5.9 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றமையினால், வர்த்தக மாற்று விகிதக் குறிகாட்டி 4.3 சதவீதத்தால் சீர்த்திருந்தித் 98 புள்ளி களாக விளங்கிற்று.

வெளிநாட்டு வர்த்தகம் சம்பந்தமான புள்ளிவிபரங்களைப் பின்னிணைப்பு 11-ல் உள்ள 32 முதல் 36 வரையுள்ள அட்டவணைகள் காட்டுகின்றன.

**ஏற்றுமதிகள்**

**தேயிலை**

தேயிலை உற்பத்தி, ஏற்றுமதி, விலை ஆகியவை சம்பந்தமான விபரங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை II ஆ-3**

**தேயிலை-உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும்**

| வருடம் | உற்பத்தி | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலச் சராசரி விலைகள் இருத்தலுக்கு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அளவு பத்து இலட்சம் இருத்தல் | அளவு பத்து இலட்சம் இருத்தல் | ஏற்றுமதி விலை இருத்தலுக்கு ரூ. ச. | உயர்ந்த பிரதேச ரூ. ச. | மத்திய பிரதேச ரூ. ச. | தாழ்ந்த பிரதேச ரூ. ச. | சகல தேயிலைகளும் ரூ. ச. |
| 1955 .. .. | 380 | 362 | 3·30 | 2·34 | 2·04 | 2·40 | 2·24 |
| 1956 .. .. | 376 | 348 | 3·00 | 2·50 | 1·96 | 1·88 | 2·16 |
| 1957 .. .. | 398 | 368 | 2·78 | 2·05 | 1·61 | 1·88 | 1·86 |
| 1958 .. .. | 413 | 411 | 2·75 | 2·11 | 1·51 | 1·48 | 1·73 |
| 1959 .. .. | 413 | 384 | 2·72 | 2·13 | 1·69 | 1·67 | 1·85 |
| 1960 .. .. | 435 | 410 | 2·67 | 2·03 | 1·75 | 1·83 | 1·88 |
| 1961 .. .. | 455 | 426 | 2·62 | 1·99 | 1·72 | 1·74 | 1·83 |
| 1962 .. .. | 467 | 452 | 2·54 | 2·02 | 1·61 | 1·56 | 1·75 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்,
கொழும்புத் தேயிலைத் தரகர் சங்கம்,
தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கைகள்.

1962-ம் ஆண்டிற் தேயிலை உற்பத்தி 120 இலட்ச இருத்தல்களால் அல்லது 2.6 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு, முந்தைய இரண்டு வருடங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவானதாகும். ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைகளின் அளவு மிகத் துரிதமாக உயர்ந்தது. எனினும், விலைவாசிகள் தொடர்ந்தும் குறைவுற்றன. கொழும்பு ஏலத்தில் ஒரு இருத்தலுக்கான சராசரி விலை 8 சதங்களால் அல்லது 4.4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சி முந்தைய வருடத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்கக் கூர்மையானதாகும். உண்மையில், 1962-ம் ஆண்டின்கடைக் கால் வருடத்தில் உள்ளவிலை, முந்தைய வருடத்தில் இதற்கு ஒப்பியல்பான காலத்திற்குரிய விலையிலும் பார்க்கக் கணிசமான அளவால் உயர்ந்ததாக இருந்ததைத் தவிர, ஏனைய கால வருடங்களுக்கான சராசரிவிலை முந்தைய வருடத்தில் அவற்றிற்கு ஒப்பியல்பான கால்வருடங்களில் நிலவிய விலைகளிலும் பார்க்க மிகக் குறைவானவையாக இருந்தன. அன்றியும், மூன்று ரகத் தேயிலைகளுக்கும் உள்ள விலைகளின் நடமாட்டங்கள் ஒருமுகமானதாய் இருக்கவில்லை. உயர்ந்த பிரதேசத் தேயிலைகளின் சராசரி விலை இவ்வருடத்திற் சிறிது (3 சதங்களால் அல்லது 1.5 சதவீதத்தால்) அதிகரித்தது. அவற்றின் விலைகள் பங்குனி மாதத்தில் உச்சநிலையை அடைந்தும், ஆனிமாதம் வரை கூர்மையாக வீழ்ச்சியுற்றும், அதன்பின் தேயிலையின் திறமையில் வழக்கமாக அக்கால போகத்தில் ஏற்படும் சீர்த்திருத்தத்தின் பயனாக, புரட்டாதி மாதம்

வரை ஓரளவு அதிகரித்தும், அன்றுட இறுதியிற் படிந்தும் விளங்கின. மத்திய பிரதேசத் தேயிலைகளின் சராசரி விலை இவ்வருடத்தில் 11 சதங்களால் அல்லது 6.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில், தாழ்ந்த பிரதேசத் தேயிலைகள் அதிலும் கூர்மையான விகிதாச்சாரமான 10.3 சதவீதத்தால் அல்லது 18 சதங்களால் வீழ்ச்சியடைந்தன. இந்த இரண்டு ரகத் தேயிலைகளினதும் விலைகள் இவ்வருடத்தின் பெரும்பகுதியான காலத்திற் குறைவாகவே விளங்கின. இவ்விலைகள் மந்தமடைவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, 1962-ம் ஆண்டு சித்திரையில் முந்திய தேயிலைகளின் மேல் உள்ள ஏற்றுமதித் தீர்வை ஒரு கில்லா கிராமிற்கு 44 நயாபைசாவிலிருந்து 25 நயாபைசாவிற்குக் குறைக்கப்பட்டமை, இலங்கையின் திறமான இரகத் தேயிலைகளைத் தவிர்ந்த ஏனைய ரகத் தேயிலைகளின் விலையைப் பாதித்தது. இரண்டாவதாக, சில மத்திய கிழக்கு நாடுகளுடன், உதாரணமாக இரான் உடன், வர்த்தகத்தை அதிகரிப்பதற்கு ஏற்றுமதிகளும், இறக்குமதிகளும் ஏறக்குறைய இணைக்கிணையான முறையில் இயங்கவேண்டிய அத்தியாவசியம் இருந்தமை முக்கியமான இடையூருக விளங்கியது. எனினும், இவ்வருடத்தின் கடைக்காற் பகுதியில், பிரமபுத்திர நதியில் வேலை செய்யும் பாகிஸ்தானிய மாலுமிகளின் வேலை நிறுத்தத்தாலும், பின்பு சீன இந்திய எல்லைத்தகராறுகளினுற் தோன்றிய நெருக்கடியாலும், கல்கத்தாவுக்கு வரும் வடஇந்தியத் தேயிலைகளின் வரத்து நிலைகுலைந்தமையைத் தொடர்ந்து இவ்விலைவாசிகள் தற்காலிகமாக உயர்ந்தன.

சீன இந்திய எல்லைத்தகராறு, இவ்வருடத்தின் இறுதிப் பகுதியளவிற் சகல உலகச் சந்தைகளிலும் உள்ள விலைகளை அதிகரிக்கச் செய்தது. இலண்டன் ஏலத்திற் சாதாரண இரகத் தேயிலைகளுக்கே மிகப்பலமான கேள்வி தோன்றியதைத் தொடர்ந்து அவற்றின் விலைகள் கூர்மையாக உயர்ந்தன. மத்திய பிரதேசத் தேயிலைகளுக்கும் நல்ல கேள்வி இருந்ததாயினும் அவற்றின் விலை அதிகரிப்பு, சிறிது குறைவான விகிதாச்சாரமாக ஏற்பட்டது. இத்தகராற்றின் பயனுக, திறமையுள்ள இலங்கைத் தேயிலைகளின் விலை அவ்வளவு தூரம் பாதிப்பு அடையாமல், பொதுவாக அவ்விதத் தேயிலைகளின் தராதரம், திறமையைத் தழுவியே மாற்றமடைந்தது. எனவே, இவ்வாண்டின் பிற்பகுதியில் உள்ள மாதங்களில், இலண்டன் ஏலத்தில் இலங்கைத் தேயிலைகளுக்கான சராசரி விலை, சகல தேயிலைகளுக்குமான சராசரி விலையிலும் பார்க்கக் குறைவானதாகவும் இருந்தது. இது மிகவும் வழமைக்கு வேறுபாடான ஒரு சம்பவமாகும்.

1962-ம் ஆண்டில் இலங்கை ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும், வடஇந்திய உற்பத்தி பெரும் அளவால் குறைந்துள்ளதெனவும், இதுவரை கிடைக்கக்கூடிய விபரங்களிலிருந்து தெரிகிறது. பிரித்தானிய நாட்டின் தேயிலை இறக்குமதி கடந்த ஆண்டிலும் பார்க்கச் சிறிது (ஏறக்குறைய 20 இலட்சம் இருத்தல்களால்)* அதிகரித்துள்ளது. 1962-ம் ஆண்டின் மேலதிக உற்பத்தியிலிருந்து 1963-ம் ஆண்டிற்குக் கொண்டு செல்லக்கூடிய கையிருப்புத் தேயிலை அவ்வளவு அதிகமாக இருக்காது எனக் கூற இடமுண்டு. எனினும் இலங்கையின் தேயிலைத் தொழில் சம்பந்தப்பட்டவரையில், தேயிலையின் திறமைதான் திருப்திகரமான விலைகளை நிர்ணயிக்கும் கருவியாக விளங்க வேண்டியிருக்கிறது.

*இலண்டன் தேயிலைத் தரகர் சங்கத்தின், மாசி, 1, 1963ற்கான தேயிலைச்சந்தை அறிக்கை.

**இரப்பர்**

இரப்பரின் உற்பத்தி, ஏற்றுமதி, விலைகள் சம்பந்தமான விபரங்களை அட்டவணை 11 ஆ-4 காட்டுகின்றது.

**அட்டவணை II ஆ-4**

**இரப்பர்—உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும்**

| வருடம் | உற்பத்தி பத்து இலட்சம் இறாத்தல் | ஏற்றுமதி பத்து இலட்சம் இறாத்தல் | ஏற்றுமதி விலை இறாத்தலுக்கு ரூ. ச. | கொழும்புச் சந்தை விலை ஆர். எஸ். எஸ். 1ம் ரகம் இறாத்தலுக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1955 .. .. | 210 | 222 | 1·58 | 1·28 |
| 1956 .. .. | 214 | 193 | 1·52 | 1·45 |
| 1957 .. .. | 220 | 209 | 1·44 | 1·16 |
| 1958 .. .. | 224 | 207 | 1·25 | 0·93 |
| 1959 .. .. | 205 | 206 | 1·45 | 1·25 |
| 1960 .. .. | 218 | 235 | 1·61 | 1·24 |
| 1961 .. .. | 215 | 197 | 1·32 | 1·01 |
| 1962 .. .. | 229 | 224 | 1·29 | 0·98 |

மூலங்கள்: இரப்பர்க் கட்டுப்பாட்டதிகாரியின் நிர்வாக அறிக்கை;
இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்கள்;
கொழும்பு இரப்பற் தரகர் சங்கம்.

1961-ம் ஆண்டில் 30 இலட்ச இறாத்தல்களால் அல்லது 1.4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்ற தேயிலை உற்பத்தி, 1962-ம் ஆண்டில் 140 இலட்ச இறாத்தல்களால் அல்லது 6.5 சதவீதத்தால் அதிகரித்தது. ஏற்றுமதி அளவு, முந்தைய ஆண்டில் ஏற்பட்ட தீட்சணமான வீழ்ச்சிக்கு எதிர்மாறாக இவ்வருடம் துரிதமாக அதிகரித்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். 1-ம் இரக இரப்பருக்கான சராசரி கொழும்புச் சந்தைவிலை, முந்தைய ஆண்டிலும் பார்க்க 3 சதங்களால் அல்லது 3.0 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று, 1950-ம் ஆண்டிற்கு பின் என்றும் அடையாத ஆகக் குறைந்த மட்டத்தை அடைந்தது. ஐக்கிய அமெரிக்காவின் கையிருப்புக் குவியல்களிலிருந்து விநியோகித்தல் சம்பந்தமான அறிவிப்புகள், சர்வதேச அரசியல் நிலைமைகளில் உண்டான நெருக்கடிகள் முதலிய முக்கிய சம்பவங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து சர்வதேச இரப்பர்ச் சந்தை இவ்வாண்டில் இடையிடையே விறுவிறுப்புடனும் ஐயப்பாட்டுடனும் மாறுப்பட்டது எனினும் இவ்வாண்டின் பெரும்பகுதியான காலங்களில் அது மந்தமாகவே விளங்கியது. இவ்வருடத்தின் முற்பகுதியில், நியூகினி சம்பந்தமாக ஒல்லாந்தருக்கும் இந்தோனேசியருக்குமிடையே ஏற்பட்ட நெருக்கடியான நிலைமையின் பயனாகவும், ருசியாவின் கொள்வனவுகளின் விளைவாக அண்மைக்கால ஏற்றுமதிக்கான இரப்பரில் தட்டுப்பாடு ஏற்பட்டதன் பயனாகவும், விலைகள் குறிப்பிடும்படியாக அதிகரித்தன. அதன்பின் விலைகள் நிதானமாக வீழ்ச்சியடைந்து சென்று, 1958-ம் ஆண்டின்பின் என்றும் அடையாத ஆகக் குறைந்த மட்டத்தை, ஆனிமாதத்தில் அடைந்தன. இந்நிலை ஏற்பட்டதற்கான காரணங்களாவன, ஐக்கிய அமெரிக்கப் பங்கு முதற் சந்தைகளில் இறக்கம் ஏற்பட்டமை, லஓஸ் சம்பந்தமான நெருக்கடி தீர்ந்தமை, கையிருப்புக் குவியல்களிலிருந்து விநியோகித்தல் சம்பந்தமான ஐயப்பாடு, செயற்கை இரப்பரின் வலுவுறைதல் அதிகரித்தமை முதலியனவாகும். 1962-ம் ஆண்டின் கடைக்காற்பகுதியிற் கியூபா சம்பந்தமான நெருக்கடி, சீன-இந்திய எல்லைத் தகராறு ஆகியவற்றின் பயனாக, விலைகள் குறிப்பிடும்படியாக அதிகரித்தன. விலைகளில் ஏற்பட்ட இச்சீர்திருத்தம் உண்மையில் மேற்கூறிய சம்பவங்களினாற்தோன்றிய நெருக்கடிநிலவிய காலத்திலும் பார்க்க நீடித்து நிலவிற்று,

இயற்கை இரப்பரை எதிர்நோக்கி நிற்கும் பெரிய விடயம் இனி மேலுள்ள வருடங்களிற் செயற்கை இரப்பரினுல் ஏற்படக்கூடிய செறிந்த போட்டிவலுவாகும். பல்வகை உபயோகங்களிலும் பாவிக்கத்தக்கமை அதிகரித்துள்ள புதிய செயற்கை இரப்பர்கள், இதுகாறும் இயற்கை இரப்பரே தனிநயம் தந்த, பாவிப்புத் துறைகளின் பரப்பை உண்மையிற் குறைக்கின்றன. எனவே வருங்காலங்களில் இரப்பரின் மொத்தக் கேள்வியிற் செயற்கை இரப்பரும் இயற்கை இரப்பரும் ஒன்றுக்கொன்று பெறக்கூடிய பங்குகள் முக்கியமாகப் போட்டியினுலேயே நிர்ணயிக்கப்படக்கூடும். விலைகள்தான் போட்டியின் முதன்மையான கருவியாக விளங்கவேண்டும். ஆயினும் ஏனைய விடயங்களும், உதாரணமாகப் பொருட்களின் ஒருமைப்பாடான இரகம், துப்பரவு, கட்டி அனுப்பும் முறை, போன்ற விடயங்களும் ஓரளவு முக்கியமானவையாகும். இவ்விடயங்களில் இயற்கை இரப்பர் செயற்கை இரப்பரிலும் பார்க்கக் கீழ்நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகள் உள. சர்வதேச இரப்பர்க் குழுவினுல் மதிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி, *1962*-ம் ஆண்டில் உலகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட *2,225,000* தொன்கள் கொண்ட செயற்கை இரப்பர், அவ்வருடம் உற்பத்தி செய்யப்பட்ட *2,110,000* தொன்கள் கொண்ட இயற்கை இரப்பரிலும் பார்க்கச் சிறிது கூடியதாகத் தெரிகிறது. எனினும் இதேகாலத்திற் செயற்கை இரப்பரின் உலக நுகர்ச்சி (*2,138,000* தொன்கள்), இயற்கை இரப்பரின் நுகர்ச்சியிலும் பார்க்க (அதாவது *2190,000* தொன்களிலும் பார்க்க) ஓரளவு குறைவுற்றது. தற்காலிக மதிப்பீடுகளின்படி, *1963*-ம் ஆண்டிற் செயற்கை இரப்பரின் உலக நுகர்ச்சியும் உற்பத்தியும், இயற்கை இரப்பரிலும் பார்க்க அதிகரிக்கக் கூடும் எனத் தெரிகிறது. உண்மையில், இயற்கை இரப்பரின் நுகர்ச்சி, *1962*-ம் ஆண்டிற்குரிய* அளவிலும் பார்க்கச் சிறிது குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தெங்குப் பொருட்கள்

பிரதான தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிகள், விலைகள் சம்பந்தமான விபரங்களை அட்டவணை II ஆ-5 தருகிறது:

**அட்டவணை II ஆ-5**

**பிரதான தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி அளவுகளும் விலைகளும்**

| வருடம் | கொப்பரா | | தேங்காயெண்ணெய் | | தேங்காய்த் துருவல் | |
|---|---|---|---|---|---|---|
| | அளவு ஆயிரம் அந்தர் | ஏற்றுமதி விலை அந்தருக்கு ரூ. ச. | அளவு ஆயிரம் அந்தர் | ஏற்றுமதி விலை அந்தருக்கு ரூ. ச. | அளவு ஆயிரம் அந்தர் | ஏற்றுமதி விலை அந்தருக்கு ரூ. ச. |
| 1955 .. | 1,367 | 41·90 | 1,945 | 58·26 | 1,157 | 47·36 |
| 1956 .. | 1,155 | 42·43 | 1,698 | 58·42 | 1,275 | 50·86 |
| 1957 .. | 695 | 47·95 | 1,081 | 62·80 | 978 | 56·08 |
| 1958 .. | 554 | 52·97 | 887 | 69·80 | 1,135 | 63·72 |
| 1959 .. | 852 | 60·52 | 1,389 | 84·41 | 1,050 | 71·45 |
| 1960 .. | 583 | 55·23 | 1,110 | 71·83 | 1,099 | 65·23 |
| 1961 .. | 1,100 | 43·47 | 1,837 | 58·16 | 967 | 49·23 |
| 1962 .. | 1,448 | 40·74 | 2,043 | 54·97 | 981 | 57·23 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்கள்

*இயற்கை இரப்பர்ச் செய்திகள், மார்கழி *1962*, பக். *1*.

1961-ம் ஆண்டில், முறையே, 88·7 சதவீதத்தாலும் 65·5 சதவீதத்தாலும் அதிகரித்த கொப்பரு, தேங்காய் எண்ணெ ஆகியவற்றின் ஏற்றுமதி அளவுகள் 1962-ம் ஆண்டிற் தொடர்ந்தும் அதிகரித்தன எனினும் அவற்றின் அதிகரிப்பு விகிதங்கள் (அதாவது 31.6 சதவீதமும், 11.2 சதவீதமும்) ஓரளவு குறைவாகவே ஏற்பட்டன. தேங்காய்த் துருவலின் ஏற்றுமதி அளவு முந்தைய வருடத்திற் கூர்மையாக வீழ்ச்சியுற்றதற்கு எதிராக 1962-ம் ஆண்டில் 14,000 அந்தர்களால் அல்லது 1.4 சதத்தாற் சிறிது அதிகரித்தது. கொப்பருவின் விலை இவ்வாண்டின் முற்பகுதியில் ஓரளவு நிதானமாக அதிகரித்தது. ஆனல் இவ்வாண்டின் நடுப்பகுதியில் வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சி பெரும்பாலும், இந்தியாவில் இறக்குமதி உத்தரவுச் சீட்டுகள் குறைக்கப்பட்டமையினுலும், இந்திய இறக்குமதித் தீர்வை அதிகரிக்கப்பட்டமையினுலும், கொப்பருவின் காலபோக நிரம்பல் அதிகரித்ததின் பயனுய் உண்டான அமுக்கங்களினுலும் ஏற்பட்டது. எனினும், இவ்வாண்டின் கடைக்காற் பகுதியிற் தெங்கு உற்பத்தி செய்யும் சில நாடுகளில் விளைவு குறையும் என எதிர்நோக்கப்பட்டமையாலும், உலகச் சந்தைகளிற் தேங்காய் எண்ணெயின் நிரம்பலிற் தட்டுப்பாடு ஏற்பட்டமையாலும், விலைகள் உயர்ந்தன. ஆயினும் இவ்வாண்டில் கொப்பருவின் சராசரி ஏற்றுமதி விலை முந்தைய வருடத்தில் இருந்ததிலும் பார்க்க 6.3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. தேங்காய் எண்ணெயின் விலை இவ்வாண்டில் கொப்பருவின் விலைகளுக்கு இணங்கி மாறுபட்டதோடு, சீனு, ருசியா, ஆகிய நாடுகளின் கொள்வனவுகளால் ஓரளவு பலமடைந்தும் விளங்கியது. தேங்காய் எண்ணெயின் சராசரி ஏற்றுமதி விலை முந்தைய ஆண்டிலும் பார்க்க 5.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஆனல் மறுபக்கத்தில், தேங்காய்த் துருவலின் விலை 1961-ம் ஆண்டிலிருந்த மந்தமான மட்டத்திலிருந்து கூர்மையாக அதிகரித்தது. இவ்வுயர்ச்சி ஓரளவில், தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்வதில் மிகக் கடினமான சுகாதார முறைகள் நிச்சயமாகக் கையாளப்படுவதற்கு அரசாங்கமும் உற்பத்தியாளரும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனுய் ஏற்பட்டது. தேங்காய்த் துருவலின் சராசரி ஏற்றுமதி விலை முந்தைய வருடத்திலும் பார்க்க 16.3 சதவீதத்தால் உயர்ந்தது.

கொழுப்புக்களினதும், எண்ணெகளினதும் உலக உற்பத்தி, 1960-61, 1961-62 ஆகிய ஆண்டுகளிற் கூர்மையாக அதிகரித்தமையும், அதே காலத்தில் உலகத்தின் நிகர இறக்குமதித் தேவைகள் தேக்கம் உற்றமையும், தான் 1962-ம் ஆண்டில் தேங்காய் எண்ணெ உட்பட்ட தாவர எண்ணெகளின் விலைகள் மந்தமடைவதற்கு முக்கிய காரணங்களாக விளங்கின. இன்னுமோர் அதிருப்தியான விடயமாக, மீன் எண்ணெ, வெண்ணெய், பன்றிக் கொழுப்பு, மாட்டுக் கொழுப்பு ஆகியவை கடந்த சர்வதேசச் சந்தைகளில் மேலும் மேலும் அதிகரித்த இடத்தைப் பெற்றுள்ளன. இது முக்கியமாக, கைத்தொழில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அவ்வித கொழுப்புகள் அடிக்கடி மான்னியமான விலைகளில் விற்கப்பட்ட இடங்களிலேயே நிகழ்ந்துள்ளது.

**இறக்குமதிகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளைப் பிரதான வர்க்கங்களின் படியும், பண்டங்களின்படியும் அல்லது பண்டத் தொகுதிகளின்படியும் வகுத்து அட்டவணை II ஆ-6 காட்டுகின்றது.

## அட்டவணை II ஆ-6

### பிரதான தொகுதிகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களின் இறக்குமதிகள், 1959-1962

| பண்டத் தொகுதிகளின்படி | பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்கள் | | | | சதவீதமாக | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959 | 1960 | 1961 | 1962 |
| **1. நுகர்ச்சிப் பொருட்கள்** | | | | | | | | |
| அ. உணவும், குடிவகைகளும் | | | | | | | | |
| (i) அரிசி .. .. | 283 | 242 | 217 | 195 | 14·1 | 12·3 | 12·7 | 11·7 |
| (ii) கோதுமை மா .. | 106 | 65 | 70 | 71 | 5·3 | 3·3 | 4·1 | 4·3 |
| (iii) சீனி .. .. | 75 | 79 | 78 | 58 | 3·7 | 4·0 | 4·6 | 3·5 |
| (iv) பாலும், பாற் பொருட்களும் .. | 76 | 70 | 65 | 74 | 3·8 | 3·6 | 3·8 | 4·5 |
| (v) இறைச்சி, மீன் முட்டை .. .. | 94 | 111 | 72 | 56 | 4·7 | 5·7 | 4·2 | 3·4 |
| (vi) கடலை, பருப்பு, கறிச் சரக்குகள் .. .. | 92 | 102 | 104 | 111 | 4·6 | 5·2 | 6·1 | 6·7 |
| (vii) ஏனைய உணவுப் பொருட்கள் .. | 60 | 70 | 56 | 60 | 3·0 | 3·6 | 3·3 | 3·6 |
| (viii) தயாரிக்கப்பட்ட குடிவகைகளும் புகையிலையும் .. | 14 | 14 | 9 | 5 | 0·7 | 0·7 | 0·5 | 0·3 |
| ஆ. ஆடைவகைகள் (உடைகள் உட்பட, ஆனால் நெசவு நூல், தையல் நூல் நீக்கி) .. .. | 189 | 207 | 183 | 161 | 9·4 | 10·6 | 10·7 | 9·7 |
| இ. ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் | | | | | | | | |
| (i) மோட்டார் கார்கள் .. | 50 | 53 | 8 | 2 | 2·5 | 2·7 | 0·5 | 0·1 |
| (ii) கடிகாரங்கள் .. | 16 | 29 | — | — | 0·8 | 1·5 | — | — |
| (iii) வானொலிப் பெட்டிகள் .. .. | 10 | 12 | 3 | 1 | 0·5 | 0·6 | 0·2 | 0·1 |
| (iv) இரப்பர் ரயர்களும் ரியூப்களும் .. | 25 | 20 | 21 | 24 | 1·2 | 1·0 | 1·2 | 1·4 |
| (v) மருந்துகளும், மருந்துப் பொருட்களும் .. | 32 | 32 | 27 | 25 | 1·6 | 1·6 | 1·6 | 1·5 |
| **2. நடுத்தரமான பொருட்கள்** | | | | | | | | |
| (i) உரம் .. .. | 61 | 58 | 57 | 60 | 3·0 | 2·9 | 3·3 | 3·6 |
| (ii) நிலஎரி எண்ணெய் பொருட்கள் .. | 132 | 118 | 126 | 125 | 6·6 | 6·0 | 7·4 | 7·5 |
| (iii) நிலக்கரி .. .. | 11 | 17 | 9 | 9 | 0·5 | 0·9 | 0·5 | 0·5 |
| (iv) தயாரிக்கப்படாத புகையிலை .. | 11 | 11 | 13 | 10 | 0·5 | 0·6 | 0·8 | 0·6 |
| (v) நெசவு நூலும் தையல் நூலும் .. | 21 | 25 | 23 | 22 | 1·0 | 1·3 | 1·4 | 1·3 |
| (vi) காகிதமும், காகித மட்டையும் .. | 34 | 39 | 33 | 32 | 1·7 | 2·0 | 1·9 | 1·9 |
| (vii) இரசாயனப் பொருட்கள் .. .. | 13 | 15 | 15 | 16 | 0·6 | 0·8 | 0·9 | 1·0 |
| (viii) சாயப் பொருட்களும், வர்ணப் பொருட்களும் .. | 13 | 12 | 11 | 15 | 0·6 | 0·6 | 0·6 | 0·9 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | | | | | | | | |
| (i) கட்டட ஆக்கப் பொருட்கள் .. | 72 | 80 | 71 | 78 | 3·6 | 4·1 | 4·2 | 4·7 |
| (ii) போக்குவரத்துச் சாதனங்கள் .. | 36 | 25 | 23 | 16 | 1·7 | 1·3 | 1·4 | 1·0 |
| (iii) இயந்திரங்களும் உபகரணங்களும் .. | 30 | 25 | 21 | 17 | 1·5 | 1·3 | 1·2 | 1·0 |
| **4. மேலுள்ள விடயங்களின் மொத்தம் .. ..** | **1,556** | **1,531** | **1,315** | **1,243** | **77·6** | **78·1** | **77·2** | **74·9** |
| **5. ஏனைய இறக்குமதிகள் ..** | **449** | **429** | **388** | **417** | **22·4** | **21·9** | **22·8** | **25·1** |
| **6. சகல இறக்குமதிகளினதும் மொத்தம் .. ..** | **2,005** | **1,960** | **1,703** | **1,660** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்.

1962-ம் ஆண்டில் இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானம் முந்தைய வருடத்திலும் பார்க்க ரூபா 430 இலட்சத்தால் அல்லது 2.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. நுகர்ச்சிப் பொருட்களில் ''உணவும் குடிவகையும்'' என்ற தொகுதியில், இறக்குமதி அளவுக் கட்டுப்பாடுகளுக்கு உட்படாத மூன்று பிரதான அரசாங்க இறக்குமதிகளான அரிசி, கோதுமைமா, சீனி ஆகியன வற்றின் பெறுமானம், ரூ. 3240 இலட்சமாக அல்லது மொத்த இறக்கு மதிகளில் 19.5 சதவீதமாக விளங்கியது. இது முந்தைய வருடத்திற்குரிய பெறுமானத்திலும் பார்க்க ரூபா 410 இலட்சம் அல்லது 11.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியாகும்.

இப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பின்வரும் விபரங்கள் காட்டுகின்றன.

அளவு = 1000 தொன்கள்
பெறுமானம் = பத்து இலட்சம் ரூபாய்கள்
விலை (கொள்விலை கப்பற்கூலி)
= தொன்னுக்கு ரூபா

| | 1961 | 1962 | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | | | முழுமையாக | சதவீதமாக |
| அரிசி அளவு | 462 | 404 | — 58 | — 12·6 |
| பெறுமானம் | 217 | 195 | — 22 | — 10·1 |
| விலை | 470·80 | 482·60 | + 11·80 | + 2·5 |
| கோதுமை மா அளவு | 171 | 173 | + 2 | + 1·2 |
| பெறுமானம் | 70 | 71 | + 1 | + 1·4 |
| விலை | 407·80 | 413·00 | + 5·20 | + 1·3 |
| சீனி அளவு | 200 | 168 | — 32 | — 16·0 |
| பெறுமானம் | 78 | 58 | — 20 | — 25·6 |
| விலை | 387·40 | 346·20 | — 41·20 | — 10·6 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்.

இத்தொகுதியைச் சேர்ந்த ஏனைய இறக்குமதிப் பொருட்களுள், இறைச்சி, மீன், முட்டை ஆகியவை ரூபா 160 இலட்சத்தால் (அல்லது 22.2 சதவீதத்தாலும்) குடிவகை, புகையிலை ஆகியவை ரூபா 40 இலட்சத்தால் (அல்லது 44.4 சதவீதத்தாலும்) தீட்சணமாகக் குறைவுற்றிருக்கையில், பால், பாற் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி ரூபா 90 இலட்சத்தால் (அல்லது 13.8 சதவீதத்தால்) மிதமாக அதிகரித்துள்ளது. மொத்த இறக்கு மதிகளில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியாக விளங்கும் ஆடை வகைகளின் (நெசவு நூல் தவிர்ந்த) இறக்குமதிகள் ரூபா 220 இலட்சத்தால் (அல்லது 12.0 சதவீதத்தால்) வீழ்ச்சியுற, ''ஏனைய நுகர்ச்சிப் பொருள்கள்'' என்ற தொகுதியிற் தடுபடையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இருந்து வரும் மோட்டோர் கார், வானொலிப் பெட்டிகள் ஆகியனவற்றின் இறக்குமதிகள் 1961-ம் ஆண்டில் அடைந்த குறைவான மட்டத்திலிருந்து இன்னமும் குறைவுற்றன. இரப்பர், ரயர், டியூப் ஆகியனவற்றின் இறக்குமதி 26-7-62 முதல் தனித்தனி இறக்குமதி உத்தரவுச்சீட்டுக் கட்டுப்பாட்டு முறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டதெனினும், அவற்றின் இறக்குமதி ரூபா 30 இலட் சத்தால் (அல்லது 14.3 சதவீதத்தால்) அதிகரித்துள்ளது. ''நடுத்தரமான பொருட்கள்'' என்ற தொகுதியில் ''சாயப்பொருட்கள், வர்ணப் பொருட் கள்'' ஆகியனவற்றின் இறக்குமதி ரூபா 40 இலட்சத்தால் (அல்லது 36.4 சதவீதத்தால்) தீட்சணமாக அதிகரித்திருக்கையில், செப்பனிடப்படாத புகையிலையின் இறக்குமதி ரூபா 30 இலட்சத்தால் (அல்லது 23.1 சதவீதத் தால்) வீழ்ச்சியுற்றது. பகிரங்கப் பொது உத்தரவுச்சீட்டு முறையின்கீழ்க் கட் டுப்பாடின்றி இறக்குமதி செய்யத்தக்க உரம், நிலஎரி எண்ணெய்ப் பொருட்கள், நிலக்கரி முதலியவற்றின் இறக்குமதிகள் முந்தைய வருடத்திலும் பார்க்க

அவ்வளவு மாற்றமடையவில்லை. ''முதலீட்டப் பொருட்கள்'' என்ற தொகுதியில் ''போக்குவரத்துச் சாதனங்களின்'' இறக்குமதி ரூபா 70 இலட்சத்தால் (அல்லது 30.4 சதவீதத்தாலும்) ''இயந்திரங்களும் உபகரணங்களும்'' முதலியவற்றின் இறக்குமதி ரூபா 40 இலட்சத்தால் (அல்லது 19.0 சதவீதத்தாலும்) கூர்மையாக வீழ்ச்சியடைந்திருக்கையில், கட்டட ஆக்கப் பொருட்களின் இறக்குமதி ரூ. 70 இலட்சத்தால் (அல்லது 9.9 சதவீதத்தால்) அதிகரித்துள்ளது. பாகுபாடு செய்யப்படாத எஞ்சிய ''ஏனைய இறக்குமதிகள்'' என்ற தொகுதியைச் சேர்ந்த பொருட்கள் ரூபா 290 இலட்சத்தால் (அல்லது 7.5.சதவீதத்தால்) அதிகரித்தன.

**வர்த்தக அமைப்பு**

பின் இணைப்பு 11-ல் உள்ள 36-ம் அட்டவணை, பிரதான பிரதேசங்களின் படியும் நாணயப் பிரதேசங்களின்படியும் உள்ள வர்த்தக அமைப்பைக் காட்டுகிறது.

பிரதான நாணயப் பிரதேசங்களுள், ஸ்டேர்லிங் பிரதேசம் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளிலும் இறக்குமதிகளிலும் அரைவாசிக்குக் கூடுதலான பங்கிற்குத் தொடர்ந்தும் வகையிழந்து வருகிறது. 1962-ம் ஆண்டின் ஏற்றுமதிகளில் 55.7 சதவீதமானவையும், இறக்குமதிகளில் 54.5 சதவீதமானவையும் ஸ்டேர்லிங் பிரதேசத்தின் பங்குகளாகும். இப்பிரதேசத்திற்கான ஏற்றுமதிகள் ரூபா 266 இலட்சத்தால் அதிகரித்து ரூபா 9838 இலட்சத்திற்கு உயர்ந்திருக்கையில், இறக்குமதிகள் ரூபா 507 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று ரூபா 9051 இலட்சத்திற்குக் குறைந்தன. இப்பிரதேசத்துடன் ஏற்பட்ட வர்த்தக நிலுவை ரூபா 787 இலட்சம் கொண்ட மிகையைக் காட்டிற்று. இது முந்தைய வருடத்திற்குரிய தொகையிலும் பார்க்க ரூபா 773 இலட்சங் கொண்ட சீர்திருத்தமாகும். டொலர் பிரதேசத்திற்கான ஏற்றுமதிகள் ரூபா 98 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று ரூபா 2379 இலட்சத்திற்குக் குறைந்தன. தேங்காயெண்ணெய் ஏற்றுமதி ரூபா 100 இலட்சங்களாற் குறைவுற்றது. இறக்குமதிகள் ரூபா 481 இலட்சத்தால் மிகக் கூர்மையாக வீழ்ச்சியுற்று ரூபா 620 இலட்சமாக இருந்தன. இது முக்கியமாகக் கியூபாவில் இருந்து வரும் சீனி இறக்குமதி 313 இலட்ச ரூபாய்களால் வீழ்ச்சியுற்றதால் உண்டானதாகும். இப்பிரதேசத்துடன் வழக்கமாக ஏற்படும் வர்த்தக நிலுவை மிகை ரூபா 1759 இலட்சத்திற்கு அதிகரித்தது. இது முந்தைய வருடத்திற்குரிய தொகையிலும் பார்க்க ரூபா 383 இலட்சம் கொண்ட சீர்திருத்தமாகும்.

சாம்ராட்சிய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் 1962-ம் ஆண்டில் ரூபா 9407 இலட்சமாக விளங்கின. இது முந்தைய வருடத்திலும் பார்க்க ரூபா 224 இலட்சம் கொண்ட அதிகரிப்பாகும். எனினும், மொத்த ஏற்றுமதிகளில் இப்பிரதேசத்திற்கான பங்கு 54.6 சதவீதத்திலிருந்து 53.3 சதவீதத்திற்குக் குறைவுற்றது. 1962-ம் ஆண்டில் சாம்ராட்சிய நாடுகளிலிருந்து பெற்ற இறக்குமதிகளின் பெறுமானம் ரூபா 616 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று ரூபா 7186 இலட்சமாக அமைந்தது. மொத்த இறக்குமதிகளில் இப்பிரதேசத்தின் பங்கும் 43.3 சதவீதத்திற்கு 2.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இப்பிரதேசத்துடன் இலங்கைக்குள்ள சாதகமான வர்த்தக நிலுவை ரூபா 2221 இலட்சமாக உள்ளது. இது முந்தைய வருடத்தில் ஏற்பட்ட சாதகமான வர்த்தக நிலுவையிலும் பார்க்க ரூபா 840 இலட்சம் கொண்ட அதிகரிப்பாகும்.

ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்திற்கான ஏற்றுமதிகள் ரூபா 78 இலட்சத்தால் அதிகரித்து, ரூபா 1548 இலட்சத்திற்கு உயர்ந்தன. இவ் உயர்ச்சிக்கான பிரதான காரணம், தேங்காய் எண்ணெ ஏற்றுமதிகள் ரூபா 61 இலட்சத்தால் ரூபா 272 இலட்சத்திற்கு அதிகரித்தமையேயாகும். மொத்த ஏற்றுமதிகளில் இச்சமுதாயத்தின் பங்கு 8.8 சதவீதமாக, முந்தைய வருடத்திற்குரிய பங்கிலும் பார்க்க அவ்வளவு வேறுபடாமல் இருந்தது. இச்சமுதாயத்திலிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானம் ரூபா 1749 இலட்சமாக உள்ளது. இது ரூபா 41 இலட்சம் கொண்ட வீழ்ச்சியாகும். மொத்த இறக்குமதிகளில் இச்சமுதாயத்தின் பங்கு முந்தைய வருடத்தில் உள்ளது போலவே 10.5 சதவீதமாக இருந்தது. இச்சமுதாயத்துடன்

நடைபெற்ற வர்த்தகம் இவ்வாண்டில் ரூபா 201 இலட்சம் கொண்ட பாதகமான வர்த்தக நிலுவையைக் காட்டிற்று. இது முந்தைய ஆண்டில் ஏற்பட்ட தொகையிலும் பார்க்க ரூபா 119 இலட்சம்கொண்ட சீர்திருத்த மாகும். ஐரோப்பிய கட்டில்லா வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானம், முந்தைய வருடத்திற் குரிய பெறுமானத்திலும் பார்க்க ரூபா 371 இலட்சத்தால் அதிகரித்து, ரூபா 5446 இலட்சமாக உயர்ந்தது. இந்நாடுகளிலிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானம் ரூபா 100 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று ரூபா 3916 இலட்சத் திற்குக் குறைந்தது. இந்நாடுகளுடன் ஏற்பட்ட வர்த்தக நிலுவை ரூபா 1530 இலட்சம் கொண்ட மிகையைக் காட்டிற்று. இம்மிகை முந்தைய வருடத்திற் குரிய மிகையிலும் பார்க்க ரூபா 471 இலட்சம் கூடியதாகும்.

ஆசியாவினதும் தூரக்கிழக்கு நாடுகளினதும் பொருளாதார ஆலோசனைச் சபையைச் சேர்ந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானம் ரூபா 639 இலட்சத்தால் அதிகரித்து ரூபா 2939 இலட்சத்திற்கு உயர்ந்தது. மொத்த ஏற்றுமதிகளில் இந்நாடுகள் பெற்ற பங்கு, 16.6 சதவீத மாக உள்ளது. இவ்விகிதம் முந்தைய ஆண்டுக்குரிய விகிதத்திலும் பார்க்க 3 சதவீதம் உயர்வானதாகும். இப்பிரதேசத்தில் இலங்கையின் முக்கிய வாடிக்கைக்காரர்களாக உள்ள சீனு, இந்தியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடு களும், இப்பிரதேசத்திற்கு இலங்கை ஏற்றுமதி செய்த பொருட்களின் மொத்தப் பெறுமானத்தில், முறையே 45.3 சதவீதமானவைக்கும், 21.5 சத வீதமானவைக்கும், 12.0 சதவீதமானவைக்கும் வகைதந்தன. இப்பிரதேசத்தி லிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானம், முந்தைய வருடத்திற்குரிய பெறுமானத்திலும் பார்க்க ரூபா 91 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று ரூபா 7235 இலட்சமாக விளங்கியது. மொத்த இறக்குமதிகளில் இப்பிரதேசத்தின் பங்கு அவ்வளவு மாற்றமின்றி 43.6 சதவீதமாக அமைந்தது. இப்பிரதேசத்தி லிருந்து வந்த இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானத்தில், மூன்று பிரதான நாடுகளாக பர்மா 26.1 சதவீதமானவற்றையும், ஜப்பான் 25.1 சதவீத மானவற்றையும், இந்தியா 22.5 சதவீதமானவற்றையும அளித்தன. இலங் கைப் பிரதேசத்துடன் நடாத்தும் வர்த்தகத்தில் ஏற்படும் பாதகமான வர்த் தக நிலுவை, வேறு எந்தப் பிரதான பிரதேசத்துடனே ஏற்படும் பாதகமான வர்த்தக நிலுவையிலும் பார்க்க மிகக்கூடியதாகும். 1962-ம் ஆண்டில் ஏற்பட்ட பாதகமான வர்த்தக நிலுவை ரூபா 4296 இலட்சமாகும். இது முந்தைய வருடத்திலும் பார்க்க ரூபா 730 இலட்சம் கொண்ட சீர்திருத்த மாகும்.

1961-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1962-ம் ஆண்டு இலங் கைக்கும் சீனுவுக்குமிடையே ஏற்பட்ட வர்த்தகத்திற் குறிப்பிடும்படியான அதிகரிப்பு ஏற்பட்டது. ஏற்றுமதிகளின் பெறுமானம் 500 இலட்சத்தாற் தீட்சணமாக அதிகரித்திருக்கையில் இறக்குமதிகள் ரூபா 60 இலட்சத்தால் உயர்வுற்றன. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முழுவதும், இரப்பர் ஏற்றுமதிகள் ரூபா 560 இலட்சத்தால் அதிகரித்தமையால் ஏற்பட்டதாகும். கொப்பரு ஏற்றுமதிகள் ரூபா 70 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் தேங்காய் எண்ணெ ஏற்றுமதிகள் முந்தைய வருடத்திலும் பார்க்கச் சிறிது அதிகரித்துள்ளன. இவ்வாண்டில் ஏற்பட்ட ரூபா 920 இலட்சம் கொண்ட வர்த்தக நிலுவை மிகை, முந்தைய ஆண்டிற்குரிய மிகையிலும் பார்க்க ரூபா 440 இலட்சத்தாற் கூடியதாகும்.

இலங்கைக்கும் சீனுவுக்குமிடையேயுள்ள வர்த்தக-சென்மதி உடன் படிக்கையின் கீழ், 1962-ம் ஆண்டில் முடிவாக்கப்பட்ட தாயேட்டின்படி அவ் வருடத்தில் 31,000 தசாம்ச தொன்கள் கொண்ட இரப்பரைச் சீனுவுக்கு விற்பனை செய்வதற்கும், 200,000 தசாம்ச தொன்கள் கொண்ட அரிசியை அந் நாட்டிலிருந்து கொள்வனவு செய்வதற்கும் வரையுறுதி செய்யப்பட்டிருக் கின்றது.

சீனுவுடன் இலங்கை நடாத்திய வர்த்தகம் சம்பந்தமான விபரங்களை அட்டவணை II ஆ-7 காட்டுகின்றது.

**அட்டவணை II ஆ-7**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வருடம் | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள்* | | வர்த்தக நிலுவை (பத்து இலட்சம் ரூபா) |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த உள் நாட்டு ஏற்றுமதி களின் சதவீதமாக | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த இறக்குமதி களின் சதவீதமாக | |
| 1956 .. .. | 182 | 11·0 | 134 | 8·2 | + 48 |
| 1957 .. .. | 167 | 10·5 | 84 | 4·6 | + 83 |
| 1958 .. .. | 78 | 4·7 | 152 | 8·8 | —74 |
| 1959 .. .. | 78 | 4·6 | 150 | 7·5 | —72 |
| 1960 .. .. | 121 | 6·6 | 132 | 6·8 | —12 |
| 1961 .. .. | 83 | 4·9 | 35 | 2·0 | + 48 |
| 1962 .. .. | 133 | 7·5 | 41 | 2·5 | + 92 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்

*சீனவுடன் செய்துகொண்ட வர்த்தகச் சென்மதி உடன்படிக்கையின் கீழ் பர்மாவிலிருந்து பெற்ற அரிசியைத் தவிர்த்து.

ருசியாவுடனும் ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் இலங்கை 1962-ம் ஆண்டு நடாத்திய வர்த்தகம், முந்தைய ஆண்டிலும் பார்க்க அதிகரித்துள்ளது. ஏற்றுமதிகள் ரூபா 87 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், இறக்குமதிகள் தீட்சணமாக ரூபா 385 இலட்சத்தால் உயர்ந்தன. இப்பிரதேசத்துடன் இவ்வாண்டு நடைபெற்ற வர்த்தகம் ரூபா 32 இலட்சம் கொண்ட பாதகமான வர்த்தக நிலுவையைக் காட்டிற்று. இக்குறை 1958-ம் ஆண்டிற்குப் பின் முதன்முறையாக ஏற்பட்ட குறையாகும்.

இலங்கை இப்பிரதேசத்துடன் நடாத்திய வர்த்தகம் சம்பந்தமான விபரங்களை அட்டவணை II ஆ- 8 காட்டுகின்றது.

**அட்டவணை II ஆ-8**

**ருசியாவுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும்* இலங்கை நடாத்திய வர்த்தகம்**

| வருடம் | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை (பத்து இலட்சம் ரூபா) |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த உள் நாட்டு ஏற்று மதிகளின் சதவீதமாக | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த இறக்குமதி களின் சதவீதமாக | |
| 1956 .. .. | 1·3 | 0·08 | 8·0 | 0·49 | — 6·7 |
| 1957 .. .. | 6·5 | 0·41 | 10·6 | 0·59 | — 4·1 |
| 1958 .. .. | 24·7 | 1·49 | 9·2 | 0·54 | + 15·5 |
| 1959 .. .. | 28·4 | 1·68 | 23·8 | 1·19 | + 4·6 |
| 1960 .. .. | 58·1 | 3·27 | 21·8 | 1·11 | + 36·3 |
| 1961 .. .. | 78·4 | 4·67 | 51·8 | 3·04 | + 26·6 |
| 1962 .. .. | 87·1 | 4·93 | 90·3 | 5·44 | — 3·2 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்

*புல்கேறியா, செக்கோசிலவாக்கியா, கிழக்கு ஜெர்மனி, கங்கேரி, போலாந்து, ரூமேனியா, யூகேசிலேவியா.

ருசியாவும், போலாந்தும் இலங்கையின் முக்கிய வாடிக்கைக்கார நாடுகளாக அமைந்தன. பிரதேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மொத்தப் பெறுமானத்தில், ருசியா ரூபா 365 இலட்சம் (அல்லது 41.9 சதவீதம்) கொண்ட தொகைக்கும் போலாந்து 320 இலட்சம் (அல்லது 36.7 சதவீதம்) கொண்ட தொகைக்கும் வகைதந்தன. ஆயினும், ருசியாவுக்கான ஏற்றுமதிகள், முந்தைய வருடத்திற்குரிய தொகையிலும் பார்க்க ரூபா 86 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. இந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பர் ரூபா 354 இலட்சத்தாற் கூர்மையாக வீழ்ச்சியுற்றிருக்கையில், தேயிலை ஏற்றுமதிகள் 1961-ம் ஆண்டுக்குரிய ரூபா 10 இலட்சத்திலிருந்து ரூபா 194 இலட்சத்திற்கு அதிகரித்தன. போலாந்துக்கான முக்கிய ஏற்றுமதி இரப்பராகும். இது ரூபா 135 இலட்சத்தால் அதிகரித்துள்ளது.

இறக்குமதித் துறையிலும் ருசியா, போலாந்து ஆகிய நாடுகளே முக்கியமானவையாக விளங்கின. இப்பிரதேசத்திலிருந்து வந்த இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானத்தில், ருசியா ரூபா 340 இலட்சம் (அல்லது 37.7 சதவீதம்) கொண்ட தொகைக்கும், போலாந்து ரூபா 273 இலட்சம் (அல்லது 30.2 சதவீதம்) கொண்ட தொகைக்கும் வகைதந்தன. செக்கோசிலவாக்கியா

விலிருந்து பெற்ற இறக்குமதிகள் ரூபா 121 இலட்சமாக விளங்கின. இவை ஏறக்குறைய முந்தைய வருடத்திற்குரிய மட்டமாகவே உள்ளன. ருசியாவிலிருந்து வந்த இறக்குமதிகள் ரூபா 245 இலட்சத்தாற் கூர்மையாக உயர்வுற்றன. இவ்வுயர்ச்சி முக்கியமாக இந்நாட்டிலிருந்து முதன்முறையாக ரூபா 146 இலட்சம் பெறுமானம் கொண்ட நிலஎரி எண்ணெய்ப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமையால் ஏற்பட்டதாகும். போலாந்திலிருந்து வந்த இறக்குமதிகள் ரூபா 31 இலட்சத்தால் அதிகரித்தன. முந்தைய வருடத்தைப் போலவே அந்நாட்டிலிருந்து வந்த பிரதான இறக்குமதி சீனியாகும். அது ரூபா 189 இலட்சமாக அமைந்தது.

ருசியாவுடனும், சீனுவுடனும், ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் இலங்கை நடாத்தும் வர்த்தகம், அந்நாடுகளுடன் முடிவாக்கப்பட்ட சென்மதி உடன்படிக்கைகளுக்கிணங்க அமைக்கப்பட்ட இருபக்கத் தீர்ப்பனவுக் கணக்குகளின் ஊடாக நிதியீட்டப்படுகிறது. இக்கணக்குகளிலும், ஐக்கிய அரபுக் குடியரசு, சிரியா, ஈரான் ஆகிய நாடுகளுடன் செய்துகொண்ட அதே மாதிரியான சென்மதி உடன்படிக்கைகளின் கீழ் அமைந்த கணக்குகளிலும் உள்ள நிகர மிச்சங்களைக் கால்வருடங்களின்படி பின் வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை II ஆ-9**

**இருபக்கச் சென்மதி உடன்படிக்கைகள்**

**சகல தீர்ப்பனவுக் கணக்குகளிலும் உள்ள மிச்சங்களின் கால்வருட நிலை**

பத்து இலட்சம் ரூபாய்களில்.

| கால முடிவில் நிகர விலை | சீனு, ருசியா ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் (1) | | மத்திய கிழக்கு நாடுகள் (2) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | போகுமதி | வருமதி | போகுமதி | வருமதி | போகுமதி | வருமதி |
| 1959 பங்குனி .. | 10·3 | | | | 10·3 | |
| ஆனி .. | | 4·5 | | | | 4·5 |
| புரட்டாதி .. | 22·2 | | | | 22·2 | |
| மார்கழி .. | | 11·7 | | | | 11·7 |
| 1960 பங்குனி .. | | 18·9 | | | | 18·9 |
| ஆனி .. | | 2·6 | | | | 2·6 |
| புரட்டாதி .. | | 13·3 | | | | 13·3 |
| மார்கழி .. | | 26·5 | | | | 26·5 |
| 1961 பங்குனி .. | | 39·4 | | | | 39·4 |
| ஆனி .. | | 25·5 | | 1·7 | | 27·2 |
| புரட்டாதி .. | 11·8 | | | 1·9 | 9·9 | |
| மார்கழி .. | 10·6 | | | 5·4 | 5·2 | |
| 1962 பங்குனி .. | | 6·9 | | 7·0 | | 13·9 |
| ஆனி .. | | 42·8 | | 10·7 | | 53·5 |
| புரட்டாதி .. | | 22·3 | | 10·8 | | 33·1 |
| மார்கழி .. | | 7·3 | | 5·4 | | 12·7 |

மூலம்: இலங்கை மகா வங்கி

(1) புல்கேரியா, செக்கோசிலவேக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, கங்கேறி, போலாந்து, ருமேனியா ஆகியன.

(2) ஐக்கிய அரபுக் குடியரசு, இரான், சிரியா ஆகியன.

**வர்த்தகக் கொள்கை**

**இறக்குமதிக் கட்டுப்பாடுகள்**

சென்மதி நிலுவை நிலைமையில் உள்ள கஷ்டங்கள் தொடர்ந்ததோடு வெளிநாட்டு ஒதுக்குநிதி நிலைமை அதிருப்தியானதாய் இருந்தமையின் பயனுக, 1962-ம் ஆண்டில் மேலும் கூடுதலான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டன. இவ்வாண்டின் தொடக்கத்திற் தனித்தனி இறக்குமதி உத்தரவுச்சீட்டு முறையின்கீழ் அமைந்த இறக்குமதிகளின் பெறுமானம், 1961-ம் ஆண்டின் இறக்குமதிகளின்படி ஏறக்குறைய ரூபா 2870 இலட்சமாக, அல்லது அவ்வாண்டின் மொத்த இறக்குமதியில் 17 சதவீதமாக இருந்தது.

1962-ம் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளின் பயனுக, இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டுப்பாடுகளின் படுகை எவ்வளவு தூரம் அதிகரித்துள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

## அட்டவணை II ஆ-10

## இறக்குமதிக் கட்டுப்பாடு

### 1962-ம் ஆண்டின் தனித்தனி இறக்குமதி உத்தரவுச் சீட்டு முறைகளின் படுகை (ஏறக்குறைய) (அ)

| | 1961ன் இறக்கு மதிகளின்படி | | 1962ன் இறக்கு மதிகளின்படி | | மொத்த மாற்றம் (பத்து இலட்சம் ரூபா) |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்தத்தின் சத வீதமாக | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்தத்தின் சத வீதமாக | |
| **தை 1, 1962** | | | | | |
| **ஆண்டின் தொடக்கத்தில் ஏறக்குறைய உள்ள படுகை .. ..** | **287** | **17** | **205** | **12** | **—82** |
| *(அ)* ஆடைகள் அல்லாதவை .. | 246 | 14 | 168 | 10 | —78 |
| *(ஆ)* ஆடைகள் *(ஆ)* .. .. | 41 | 2 | 37 | 2 | — 4 |
| **மாசி 8, 1962** | | | | | |
| இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 4/62—பத்திரப்படுத்தப்பட்ட பழங்கள், முள்ளுக்கம்பி, அச்சடித்தற்காகிதங்கள், எழுதும் காகிதங்கள், மரம் மினுக்கும் மை, துவாய்கள் உட்பட 21 விடயங்கள்.. | 15 | 1 | 11 | 1 | — 4 |
| **ஆடி 26, 1962** | | | | | |
| *(1)* இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 28/62—முன்பு உத்தரவுச் சீட்டிற்கு உட்படாத சகல ஆடைகளும்.. | 165 | 10 | 146 | 9 | —19 |
| *(2)* இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 29/62—இறப்பர் ரயர்களும், ரியூப்புகளும் .. .. | 21 | 1 | 24 | 1 | + 3 |
| **புரட்டாதி 15, 1962** | | | | | |
| இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 37/62—பேக்கரித் தயாரிப்புகள், ''சீஸ்'', ''மாஜரின்'', ''ஐஸ்கிறீம் கோன்'' நிலஓடு, மின்சார விளக்கு, கை வளையல்கள், கண்ணாடி வளையல், சிகரட் மூட்டி, ஊதுபத்தி, உட்பட்ட 47 பல்வேறு விடயங்கள் .. .. .. | 17 | 1 | 21 | 1 | + 4 |
| **ஐப்பசி 10, 1962க்கு முன் உள்ள கட்டுப்பாடுகளின் மொத்தப்படுகை .. ..** | **505** | **30** | **407** | **25** | **—98** |
| **ஐப்பசி 10, 1962** | | | | | |
| இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 44/62—கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டின்கீழ் இருந்துவரும் விடயங்களான உணவுப் பொருட்கள், நிலஎரி எண்ணெ, எரிபொருட்கள், உரம், இலங்கை ஆஸ்பத்திரிகளின் வழிநூற்களில் உள்ள மருந்து வகைகள் ஆகியன அல்லாத ஏனைய சகல இறக்குமதிகளையும் இவ்வறிவித்தல் தனித்தனி உத்தரவுச்சீட்டுக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளது .. .. | | | | | |
| **ஐப்பசி 10, 1962ல் நிலவிய மொத்தப் படுகை** | **811** | **48** | **807** | **49** | **—4** |

*(அ)* படுகை பற்றிய எண்தொகைகள் ஏரளவு ஏறக்குறைய உள்ள எண்தொகைகளாகும். ஏனெனில் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு விடயத்தையும் (பல சந்தர்ப்பங்களில் அவை சிறு அளவுடையனவாக அல்லது வேறு விதமாக வகுக்கப்பட்டமையால்) சுங்கத்திணைக்களத்தின் புள்ளி விபரங்களிலிருந்து பிரித்து அறிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது.

*(ஆ)* ஆடைகள் என்ற பிரிவிற் சேர்க்கப்பட்டுள்ள இறக்குமதிகளிற் பெரும்பகுதியானவை, அவற்றின் விலை ஒரு குறிக்கப்பட்ட பெறுமானத்திற்கு மேற்படாமல் இருந்ததாயின், தனித்தனி உத்தரவுச்சீட்டுக் கட்டுப்பாட்டிற்கு உட்படவில்லை.

1962-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ம் திகதி, உணவுப்பொருட்கள், நிலஎரி எண்ணெ, எரிபொருட்கள், உரம், மருந்துவகைகள் ஆகிய ஐந்து விடயங்களையும் தவிர்ந்த ஏனைய சகல இறக்குமதிப் பொருட்களும் தனித்தனி உத்தரவுச்சீட்டுக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதற்கு முன் இருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் படுகை, 1961-ம் ஆண்டின் இறக்குமதி களின்படி, ஏறக்குறைய ரூபா 5050 இலட்சம் கொண்ட இறக்குமதிகளை அல்லது மொத்தத்தின் 30 சதவீதமானவற்றைத் தழுவியது எனத் தெரிகிறது. 1962-ம் ஆண்டு இறக்குமதிகளின்படி ஒப்பியல்பான இப்படுகை, ஏறக்குறைய ரூபா 4070 இலட்சம் கொண்ட இறக்குமதிகளை அல்லது மொத்தத்தின் 25 சத வீதமானவற்றைத் தழுவியது. இக்கட்டுப்பாடுகளமைந்த இறக்குமதிகளின் பெறுமானம் 1961-ம் ஆண்டில் இருந்ததிலும் பார்க்க, 1962-ம் ஆண்டில் ரூபா 980 இலட்சம் குறைவானதாகும். 1962-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ம் திகதி புகுத்தப்பட்ட கட்டுப்பாடுகளின் பயனுக மொத்தப்படுகை தீட்சணமாக அதிகரித்து, 1961-ம் ஆண்டின் இறக்குமதிகளில் ரூபா 8110 இலட்சங்களையும் அல்லது 48 சதவீதமானவற்றையும், 1962-ம் ஆண்டு இறக்குமதிகளில் ரூபா 8070 இலட்சங்களையும் அல்லது 49 சதவீதமானவற்றையும் தழுவியது.

1962-ம் ஆண்டு ஆடி, புரட்டாதி, ஐப்பசி ஆகிய மாதங்களிற் புகுத்தப் பட்ட நடவடிக்கைகளின் பயனுக, வருடம் ஒன்றுக்கு ஏறக்குறைய ரூபா 1000 இலட்சம் கொண்ட அந்நிய செலாவணி சேமிக்கப்படும் என உத்தேசிக் கப்பட்டுள்ளது. இதன் முழுப் பலாபலனும் சந்தேகமின்றி 1963-ம் ஆண்டி லேயே காணப்படும். விரிவான புள்ளிவிபரங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில், இக்கட்டுப்பாடுகள் 1962-ம் ஆண்டின் இறக்குமதிகளை எவ்வளவு தூரம் பாதித்தன என்பதை ஓரளவு சரியான திட்டவட்டமாகக் கணக்கிடுவது கடின மாகும். முதலாவதாக, தனித்தனி உத்தரவுச்சீட்டு முறையின் கீழ்க் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு விடயம் சம்பந்தமாகவும் அனுமதிப் பிரமாணப் பங்கு கள் அறிவிக்கப்படுவதில்லை. இரண்டாவதாக, அளவுக்கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு விடயத்தையும் (பல சந்தர்ப்பங்களில் இவை சிறு அளவுடையனவாக அல்லது வேறு விதமாக வகுக்கப்பட்டுள்ள மையால்) சுங்கத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களிலிருந்து அறிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. எனினும் சில விடயங்கள் சம்பந்தமாக, கட்டுப் பாடுகளை முன்கூட்டியே எதிர்பார்த்து அப்பொருட்களைப் பிரமாண்டமான அளவில் இறக்குமதி செய்ய இறக்குமதியாளரை முன்கூட்டியே ஆணையிட்டு வைத்துக்கொண்டமை, உத்தரவுச்சீட்டுக் கட்டுபாட்டு நடவடிக்கையின் பலனை எவ்வளவோ மேலதிகமாக ஈடுசெய்துள்ளது என்பதற்கான ஆதாரங் கள் உள.

## தீர்வைகள்

### ஏற்றுமதித் தீர்வைகள்

ஏற்றுமதிப் பொருட்களின் தீர்வைகளில், தேங்காய்ப் பிண்ணுக்கிற் கான தீர்வையைத் தவிர ஏனைய தீர்வைகளில் இவ்வருடம் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. தேங்காய்ப் பிண்ணுக்கின் பேரில் தொன் ஒன்றுக்கு ரூபா 25/- ஆக இருந்த ஏற்றுமதித் தீர்வை, 1962-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18-ம் திகதி முதல் தொன் ஒன்றுக்கு ரூபா 75/- ஆக உயர்த்தப்பட்டது. எனினும்

இவ்வாண்டின் இறுதிப் பகுதியில், கொப்பரு, தேங்காய் எண்ணெ, தேங்காய்த் துருவல், தேங்காய்கள் ஆகியனவற்றின் மேல் சாய்வுப்பிரமாண ஏற்றுமதித் தீர்வை முறை ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் ஊக்கமான ஆலோசனைகளை நடத்தியது.[1]

**இறக்குமதித் தீர்வைகள்**

1962-ம் ஆண்டு ஆடி 26-ம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், அநேகமான இறக்குமதிப் பொருட்களின் மீது அதிகரித்த இறக்குமதித் தீர்வைகள் கொண்டுவரப்பட்டன. இத்தீர்வைகளினுற் பாதிக்கப் பட்ட இறக்குமதிகளின் பெறுமானம் 1961-ம் ஆண்டின் இறக்குமதிகளில் ரூபா 1400 இலட்சமாக அல்லது 8 சதவீதமாக உள்ளது. விற்பனை வரி புகுத்தப்பட்டுப் பின்பு ரத்து செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, 1962-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் திகதி, மனித நுகர்ச்சிக்கான குடிவகையல்லாத உணவுப் பொருட்களையும், அபாயகரமான நிலஎரி எண்ணெ, மண்எண்ணெ, சுத்தம் செய்யப்படாத நிலஎரி எண்ணெ ஆகியனவற்றையும், 1962-ம் ஆண்டு ஆடிமாதம் 26-ம் திகதி புகுத்தப்பட்ட உயர்ந்த தீர்வைகளாற் பாதிக்கப் பட்ட பொருட்களையும் தவிர்ந்த ஏனைய சகல இறக்குமதிப் பொருட்களின் மீதும் உள்ள தீர்வை 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பு, 1962-ம் ஆண்டின் இறக்குமதிகளில் ஏறக்குறைய ரூபா 8630 இலட்சத்திற்கு அல்லது மொத்த இறக்குமதிப் பெறுமானத்தில் 51 சதவீதத்திற்கு வகைதந்த பொருட்களைப் பாதித்தது. இந்த இரண்டு அறிவிப்புகளும், உள்நாட்டு நாணய விரிவை மட்டப்படுத்துவதற்கும் உள்நாட்டுப் பொருட்கள், இறக்குமதிப் பொருட்கள் ஆகியனவற்றிற்கான கேள்விகளைக் குறைப்பதற்கும் எனக் கையாளப்பட்ட சீராக்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளன.

தொழில் அபிவிருத்திக்கு அத்தியாவசியமானவை என அபிவிருத்தி அதிகாரியின் நற்சாட்சி பெற்ற ''மூலப் பொருட்கள், தொழிலியல் இயந்திரங்கள், உபகரணங்கள், அவற்றின் தொகுதிகள், முக்கிய பகுதிகள், ஏனைய பகுதிகள்'' முதலியனவற்றின் மேல் ஒரே மட்ட விகிதமான சலுகைத்தீர்வை (அதாவது, முன்னுரிமையாயின் $7\frac{1}{2}$ சதவீதமும், பொதுவாயின் $17\frac{1}{2}$ சத வீதமும்) 1962-ம் ஆண்டு மாசிமாதம் 7-ம் திகதி புகுத்தப்பட்டது.

---

(1) இப்பொருட்களுக்கான ஒரு சாய்வுப்பெறுமான ஏற்றுமதித் தீர்வை முறை 1963ம் ஆண்டு தைமாதம் 7-ம் திகதி புகுத்தப்பட்டது. இவ்வித அமைப்பின்படி ஸ்றெயிற்ஸ் (அதாவது சிங்கப்பூர்) தேங்காய் எண்ணெக்கு இலண்டனில் நிலவிய சராசரிக் கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி உட்பட்ட விலையை அளவாகக் கொண்டு, திங்கட்கிழமை தொடக்கமாக உள்ள ஒவ்வொரு வாரத்திற்குமான ஏற்றுமதித்தீர்வைகள், பிரதம சுங்க அதிகாரியால் மதிப்பிடப் பட்டு அறிவிக்கப்படுகின்றன. இவ்வித அமைப்பின்படி கீழ்மட்டத் தீர்வைகள் பின்வருமாறு.

| ஸ்றெயிற்ஸ் (அதாவது சிங்கப்பூர்) தேங்காய் எண்ணெக்கு இலண்டனில் நிலவிய மதிப்பிடப்பட்ட கொ.கா.க. விலை | தீர்வைகள் கொப்பரு தொன்னுக்கு | தேங்காய் எண்ணெ தொன்னுக்கு | தேங்காய்த் துருவல் தொன்னுக்கு | தேங்காய்கள் 1000க்கு |
|---|---|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் |
| £65க்கு கீழ் | 115·00 | இல்லை | இல்லை | 28·75 |
| £65 | 115·00 | இல்லை | இல்லை | 28·75 |
| £65க்கு மேல், ஆனல் £66க்கு மேற்படாமல் | 117·73 | 4·44 | 3·77 | 29·43 |

இலண்டனில் தேங்காய் எண்ணெயின் கொ.கா.க விலை 147 பவுண் அல்லது அதற்குமேல் இருப்பின், இப்பொருட்களின் மீதுள்ள மேல்மட்டத் தீர்வைகளான ரூபா 462.30, ரூபா 564·37, ரூபா. 479·26, ரூபா 115·58 ஆகியன முறையே இறுக்கப்படல் வேண்டும்.

**வர்த்தக ஒப்பந்தங்கள்**

பின்வரும் வர்த்தக ஒப்பந்தங்கள் இவ்வருடத்தில் முடிவாக்கப்பட்டன.

1962-ம் ஆண்டு தை 12-ம் திகதி, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுடன் (கிழக்கு ஜெர்மனியுடன்) ஒரு சென்மதி ஒப்பந்தம் முடிவாக்கப்பட்டது. இவ் ஒப்பந்தம் 1963-ம் ஆண்டு சித்திரை 22-ம் திகதிவரை நடைமுறையில் இருக்கும். ஆயினும் அதன்பின் வருடா வருடம் புதுப்பிக்கத்தக்கது. இவ் ஒப்பந்தம் 40,000 பவுண் கொண்ட பரஸ்பரமான சுழற்கடனுக்கு இடமளிக்கின்றது.

1962-ம் ஆண்டு மாசி 18-ம் திகதி, இருனுடன் ஒரு வர்த்தக-சென்மதி உடன்படிக்கை முடிவாக்கப்பட்டது. இதன் வர்த்தக உடன்படிக்கைக்கு இணங்க, இலங்கை, 10 இலட்சம் பவுண் பெறுமானமுள்ள தேயிலையை ஏற்றுமதி செய்யவும், அந்நாட்டிலிருந்து 5 இலட்சம் பவுண் பெறுமானமுள்ள சீரகம், பருப்புவகைகள், காய்ந்த பழவகைகள், தார் ஆகியனவற்றை இறக்குமதி செய்யவும் ஏற்றுக்கொண்டது. இதன் சென்மதி உடன்படிக்கை 100,000 பவுண் கொண்ட பரஸ்பர சுழற்கடனுக்கு இடமளிக்கிறது. இரண்டு உடன்படிக்கைகளும் முறையேற்கப்பட்ட நாள்முதல் ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகும்.

1962-ம் ஆண்டு மாசிமாதம் 16-ம் திகதி, ஐக்கிய அரபுக்குடியரசுடன் 1960-ம் ஆண்டு மார்கழி 23-ம் திகதி செய்து கொண்ட வர்த்தக சென்மதி ஒப்பந்தத்திற்கு ஒரு தாயேடு முடிவாக்கப்பட்டது. இந்தத் தாயேடு ஏனைய விடயங்களுடன், சீரியா பிரதேசம் சம்பந்தமாக ஆதி ஒப்பந்தத்தில் உள்ள வரையறைகளை நீக்கவும், ஐக்கிய அரபுக்குடியரசில் இருந்து ஏற்றுமதி செய்தற்குரிய பொருட்களின் பட்டியலைத் திருத்தி அமைக்கவும் வகைப் பட்டது. அத்துடன் பரஸ்பர சுழற்கடன் தொகையை 250,000 பவுணில் இருந்து 350,000 பவுணுக்கு அதிகரிக்கவும் இடமளித்துள்ளது.

1962-ம் ஆண்டு தைமாதம் 1-ம் திகதி முதற் செல்லுபடியாக வேண்டிய ஒரு ஒப்பந்தம், 1962-ம் ஆண்டு மாசிமாதம் 22-ம் திகதி ருசியாவுடன் முடிவாக்கப்பட்டது. இவ் ஒப்பந்தம் 1962-ம் ஆண்டு முதல் 1964-ம் ஆண்டுவரை உள்ள காலத்திற்குள் இருநாடுகளும் தத்தம்மிடையே பொருட்களை அனுப்பிவைத்தல் சம்பந்தமாக உள்ளது. இவ் அனுப்பிவைத்தல்கள், மாசி. 8, 1958ன் வர்த்தக-சென்மதி உடன்படிக்கையின் விதிகளுக்கிணங்க அனுப்பிவைக்கப்படும். இவ் ஒப்பந்தத்தோடு கூடிய, பரிமாறப்பட்ட கடிதங்களில், இரு நாடுகளுக்குமிடையே நிலைதவருத ஒரு கப்பற் போக்குவரத்துச் சேவையை நிறுவுவதற்கும் கொள்கையளவில் இடமளிக்கப்பட்டுள்ளது.

1962-ம் ஆண்டு மாசி 23-ம் திகதியில், இலங்கை, கொறியமக்கள் ஜனநாயகக் குடியரசு ஆகிய இரு தேசங்களுக்குமிடையே உள்ள வர்த்தக உறவுகள், பரஸ்பரமான நேச நாட்டு வசதிகளின் அடிப்படையில் அபிவிருத்தியடையும் நிபந்தனைகளுடன் கடிதங்கள் பரிமாறப்பட்டன. இவ் வசதிகள் ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகும். எனினும் தன்னியக்கமாகவே காலத்தை நீடிப்பதற்கும் இதில் இடமளிக்கப்பட்டுள்ளது.

1957-ம் ஆண்டு சித்திரை 23-ம் திகதி, இத்தாலியுடன் முடிவாக்கப்பட்ட ஒப்பந்தத்தின் செல்லுபடியை மேலும் ஒரு வருடத்திற்கு நீடித்துக் கடிதங்கள் வைகாசி 16, 1962ற் பரிமாறப்பட்டன.

1959-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25-ம் திகதி பர்மாவுடன் செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தத்திற்கு இணங்க, 1963-ம் ஆண்டில் பர்மாவிலிருந்து 225000 தொன்கள் கொண்ட அரிசியையும், அதற்கு மேலாக பர்மாவின் சம்மதத்தைப் பொறுத்து மேலும் 25,000 தொன்கள் கொண்ட அரிசியையும் இறக்குமதி செய்ய இடமளித்து, 1962-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22-ம் திகதி பர்மா அரசாங்கத்துடன் கடிதங்கள் பரிமாறப்பட்டன. இலங்கைப் பொருட்களைக் கூடுதலான அளவில் பர்மா இறக்குமதி செய்யச் சம்மதித்தமையும் இதில் அடங்கியுள்ளது,

1962-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3-ம் திகதி, சீனமக்கள் குடியரசுடன் 1963-ம் ஆண்டு தை 1-ம் திகதி தொடக்கம் ஐந்து வருடங்களுக்கு நிலைக்கக் கூடிய ஒரு வர்த்தக-சென்மதி உடன்படிக்கை முடிவாக்கப்பட்டது. இவ் உடன்படிக்கை, 1962-ம் ஆண்டின் இறுதியில் செயலற்றுப் போன அதே விதமான உடன்படிக்கைக்கு மாற்றாக உள்ளது. ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் முடிவதற்குமுன், அதை அடுத்து வரும் வருடத்தில் பரிமாறிக் கொள்வதற்கென உள்ள பொருட்களைக் குறித்துக் காட்டும் தாயேடு ஒன்று முடிவாக்கப்பட வேண்டுமென இவ்வுடன்படிக்கையில் வரையப்பட்டுள்ளது. இவ்வுடன்படிக்கை முடிவாக்கப்பட்ட அதேநாளில் 1963-ம் ஆண்டிற்கான தாயேடும் கைச்சாத்திடப்பட்டது. 1963ம் ஆண்டில், இருநாடுகளும் தனித்தனி ரூபா 1100 இலட்சம் பெறுமானமுள்ள ஏற்றுமதிகளைச் செய்வதன் நோக்க மாகவும், குறிப்பாக ரூபா 870 இலட்சம் பெறுமானமுள்ள 33000 தசாம்ச தொன் இரப்பரை ஏற்றுமதி செய்யும் பொறுப்பு இலங்கையின் மீதும், அதே அளவு பெறுமானமுள்ள 200,000 தசாம்ச தொன் அரிசியை ஏற்றுமதி செய்யும் பொறுப்பு சீனாவின் மீதும் அமைத்து, 1963-ம் ஆண்டிற்கான தாயேடு வரையப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தம் முடிவாக்கப்பட்ட அதே நாளில் பொருளாதார தொழில் நுட்பக் கூட்டுறவு சம்பந்தமான ஒரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது. இதற்கிணங்க, 1963-ம் ஆண்டு தை 1-ம் திகதி முதலான ஐந்து வருடங்களில் ரூபா 500 இலட்சம் பெறுமான முள்ள பொருளாதார உதவிகளையும், தொழில் நுட்ப உதவிகளையும் நன் கொடைகளாகச் சீனா அளிக்கும். இந்நன்கொடைகள் பண்டங்களின் வடிவத்திலேயே அளிக்கப்படும்.

1963-ம் ஆண்டுக்குரிய வர்த்தகத்தில், இலங்கை இந்திய நாடுகள் விசேட கருத்துக்கொண்டுள்ள பொருட்களின் வர்த்தகம் சம்பந்தமான ஒழுங்குகளை வகுத்து, 1962-ம் ஆண்டு மார்கழி மாதம் 23-ம் திகதி, இந்திய அரசாங் கத்துடன் கடிதங்கள் பரிமாறப்பட்டன. இவ்வொழுங்குகளில் ஒரு விடய மாக, ரூபா 500 இலட்சம் வரை பெறுமானமுள்ள மூலதனப்பொருட்களை, அதாவது இலங்கைக்குத் தேவைப்படக்கூடிய புகையிரத உபகரணங்கள், தொலைபேசி உபகரணங்கள், இவை போன்ற ஏனைய அனுமதிக்கப்பட்ட மூலதனப் பொருட்கள் ஆகியனவற்றைப், பின்போடப்பட்ட கொடுப்பனவு வசதியோடு, இந்தியா இலங்கைக்கு விற்பனை செய்யவும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.